| | |
|---|---|
| | **<u>பொள்ளாச்சி நகராட்சி</u>**<br><br>**<u>29.05.2020 அன்று நடைபெற்ற சாதாரணக் கூட்ட தீர்மானம்</u>** |
| **2224)** | பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான நகரளவு வார்டு E, பிளாக் எண்.10, நகரளவு எண்.645, பாலகோபாலபுரம் வீதியில் திருமதி. ஜெயகௌரி என்பவர் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை அகற்ற நடவடிக்கை எடுக்கக் கோரி திரு.ஜெகநாதன், பொள்ளாச்சி என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு எண்.W.P.No.1471/2020ல் ஆணையர் பொள்ளாச்சி அவர்களை பிரதிவாதியாக சேர்க்கப்பட்டு வழக்கு தொடரப்பட்டுள்ளது.<br>எனவே மேற்படி வழக்கினை சென்னை உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞர் திரு.B.ஆனந்த், அவர்களை நகராட்சி சார்பாக வழக்கினை நடத்தவும், அதற்கு ஆகும் உத்தேச செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண்.443/2020/ஜி1** |
| **2225)** | பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட, கோவை ரோடு, நகளரவு வார்டு E, பிளாக் எண்.4, நகரளவு எண்.199/PTல் நகராட்சி அனுமதி பெறாமல் G.I.சீட் ஆல் ஆன நெட் அமைக்கப்பட்டதை அகற்றுமாறு நகராட்சி முன் அறிவிப்பு வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, திரு.P.கருணாகரன் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.No.7643/2020 மற்றும் W.M.P.No.8997/2020ல் நகராட்சிக்கு எதிராக வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கினை நகராட்சி சார்பாக ஆஜராகி வாதாட வழக்கறிஞர் திரு.R.உதயகுமார், அரசு கூடுதல் வழக்கறிஞர் அவர்களை நியமிக்கவும் அதற்காகும் உத்தேச செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண்.1619/2020/ஜி1** |
| **2226)** | NULM திட்டத்தில் கட்டப்பட்டு பயன்பாட்டுக்கு கொண்டு வரதயாராக உள்ள வீடில்லாதவர்களுக்கான கட்டிடம் ரூ.42.00லட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு உள்ளது. இதற்கு தேவைப்படும் சமையல் பாத்திரங்கள் கொள்முதல் செய்ய வேண்டியுள்ளது. இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.52,000/– ஆகும் இதற்கான செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொது நிதியில் செய்யலாம். மன்ற அனுமதி எதிர்நோக்கிய தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்.1968/2020/இ1** |
| **2227)** | நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொது இடங்கள் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களில் திரைப்படத்திற்கான படப்பிடிப்பு நடத்திட கீழ்க்கண்ட கட்டணங்கள் வசூல் செய்யப்பட்டு வருகிறது.<br><br>வைப்புத் தொகை – ரூ. 10,000/–<br>திரைப்படம் நடத்துவதற்கான அனுமதி கட்டணம் – ரூ. 5,000/– (நாள் ஒன்றுக்கு)<br>திடக்கழிவு பயன்பாட்டிற்கான கட்டணம் (நாள் ஒன்றுக்கு) – ரூ. 1,500/– (பகுதி ஒன்றுக்கு)<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. திடக்கழிவு பயன்பாட்டு கட்டணத்தை ரூ.2000/– ஆக உயர்வு செய்து நிர்ணயம் செய்யலாம். |

**ந.க.எண்.1758/2020/அ6**

**2228)** நகராட்சிக்கு சொந்தமான அண்ணா மத்திய பேருந்து நிலையம் மற்றும் கூடுதல் பேருந்து நிலையத்திற்கு “A” நிலை அங்கீகாரம் 16.08.2020ல் முடிவடைகிறது. மேற்படி பேருந்து நிலைய அங்கீகாரத்தினை புதுப்பிக்கவும், புதுப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளவும் மற்றும் அதற்கான அனைத்து செலவினத்திற்கும் மன்ற அனுமதிக்காக வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.1519/2017/அ6**

**2229)** நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பலன் தரும் மரங்களின் பலன்களை மட்டும் அனுபவித்துக் கொள்ளும் உரிமத்தினை 01.07.2020 முதல் 30.06.2021 முடிய உள்ள காலத்திற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர செய்தித்தாளில் விளம்பரம் செய்திடவும், அதற்கான அனைத்து செலவினங்கள் மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.2172/2019/அ6**

**2230)** இந்நகராட்சியில் சொத்துவரி இனங்களில் அரசுக் கட்டிடங்கள் (ம) வழக்குகளில் உள்ள வரிவிதிப்புகள் நீங்கலாக Collectable மட்டும் 24678 வரிவிதிப்புகள் உள்ளன. அதே போன்று தொழில்வரியில் அரசு பணியாளர்கள் செலுத்தும் வரி விதிப்புகள் நீங்கலாக மொத்தம் 3216 உள்ளன. மொத்தம் 27,894 வரிவிதிப்புகள் கேட்பு அறிக்கையினை கணினியில் எடுத்து வரிவிதிப்புதாரர்களுக்கு வழங்கும்பட்சம் நகராட்சியில் வெள்ளைத்தாள் (Paper) செலவு (ம) டோனர் செலவுகள் அதிகமாகும் ஆததால் இதனை உள்ளூரில் விலைப்புள்ளி பெற்று 27,894 பிரதிகள் எடுக்க அனுமதியும் அதற்காக ஆகும் உத்தேச செலவினம் ரூ.70,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்

**ந.க.எண்.1694/2020/அ2**

**2231)** பொள்ளாச்சி நகராட்சியின் வடுகபாளையம் அம்பேத்கார் வீதி மற்றும் மரப்பேட்டை முகமது நகரில் குடிசை வாழ் மக்கள் குடிநீர் பெறும் பொருட்டு அமைக்கப்பட்டுள்ள 5000லிட்டர் கொள்ளளவு கொண்ட HPDE நீர் தொட்டிகள் பழுதடைந்து முற்றிலும் பயன்படுத்தா நிலையில் உள்ளது. இதனால் குடிநீர் விநியோக பணிகள் பாதிப்படைகிறது. பழுதடைந்த HPDE நீர்தொட்டிகளை அகற்றி புதிய 5000 லிட்டர் HPDE நீர்தொட்டிகளை உடனடியாக அமைக்க வேண்டியுள்ளது. கொரோனா தடுப்பு நடவடிக்கைக்கு தண்ணீர் வழங்க வேண்டியதின் அவசர அவசியம் கருதி இப்பணியினை செய்ய ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாடு நகராட்சிகளின் விதிகளின் Section-15 கீழ்அனுமதிக்கப்பட்டு, பணி மேற்கொள்ள விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளின் விவரம்.

| | | |
|---|---|---|
| 1. | Mr. A. Baskaran, Coimbatore | 0.03% மதிப்பீட்டை விட குறைவு |
| 2. | Mr. R. Subramani, Pollachi | 0.18% மதிப்பீட்டை விட அதிகம் |
| 3. | M/s. K.R.Kalidhas & Co, Pollachi | 0.32% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்காண் விலைப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் அளித்துள்ள Mr. A. Baskaran, Coimbatore அவர்களின் விலைப்புள்ளியினை ஏற்று பணி ஆணை வழங்கப்பட்டு, பணி முடிக்கப்பட்ட நடவடிக்கை

| | |
|---|---|
| | எடுத்ததற்கும் இதற்கான பட்டியல் தொகை வழங்கவும் மேற்கொண்ட நடவடிக்கைகளை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**<br>1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>**ந.க.எண்.0751 /2020/இ2** |
| **2232)** | பொள்ளாச்சி நகராட்சியின் வார்டு எண்.23க்குட்பட்ட பாரத்நகர் விஸ்தரிப்பு–Iல், இரண்டு புதிய தெருவிளக்குகள் அமைக்கவும், அதற்காகும் கட்டணத் தொகை ரூ. 10,579/–யை, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு செலுத்தவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மின்கழகத்திற்கு தொகை செலுத்தியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்.5485 /2020 /இ2** |
| **2233)** | பொள்ளாச்சி நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு இயக்கப்பட்டு வரும் வாகனம் எண் TN 41 AU 6388 (LCV) வாகனத்திற்கு பழுதுநீக்கம் செய்து தகுதிச் சான்று பெறும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.38,000/- திற்கும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலககுறிப்பு:-</u>**<br>1. மன்றம்அனுமதிக்கலாம்.<br>2. பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்- 01785/2020/எச்2** |
| **2234)** | பொள்ளாச்சி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளின் போது கொரோனா தொற்று நோய் சம்பந்தமாக தனிமைபடுத்தப்பட்ட வீடுகள் மற்றும் தொற்று நோய் ஏற்படுமென்ற சந்தேகத்தின் அடிப்படையில்(Containment Zone) தடை விதிக்கப்பட்ட பகுதிகள் மற்றும் கொரோனா தொற்று நோய் பாதித்துள்ள வீடுகளிலும், பொதுமக்கள் மற்றும் தூய்மை பணியாளர்களும் தொற்று நோய் தவிர்க்க அன்றாடம் பயன்படுத்தப்படும் முகக்கவசம்(mask), கையுறை(Gloves), அனைத்தும் மருத்துவ கழிவுகளாக கருதப்பட வேண்டுமென மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் அறிவுறுத்தியுள்ளது. இதனை மருத்துவ கழிவுகள் மேலாண்மை சட்டம் 2016-ன் படி முறையாக அழிப்பதற்காக M/S.டெக்னோதெர்ம் இண்டஸ்ட்ரீஸ், கோயம்புத்தூர் நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொள்ளவும் அதற்கு தற்போது செலுத்த வேண்டிய தொகை ரூ.20000/-த்திற்கும் தொடர்ந்து மருத்துவ கழிவுகள் அகற்ற ஒப்பந்தப்படி உரிய கட்டணம் செலுத்தி வரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:-</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. பொது சுகாதாரப்பிரிவின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>**ந.க.எண்- 1186/2019/எச்2** |

| | |
|---|---|
| **2235)** | பொள்ளாச்சி நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் குப்பைகளை சேகரம் செய்து அகற்றப்படும் பணிகளுக்கு வானங்களை இயக்க ஓட்டுநர்கள் பற்றாக்குறை உள்ளதால் ஒப்பந்த அடிப்படையில் தற்காலிக ஓட்டுநர்களைக் கொண்டு பணிமேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி ஓட்டுநர்களின் ஒப்பந்தக்காலம் 30.06.2020 உடன் முடிவடைய உள்ளதால் மேற்படி புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோரவும், பொது சுகாதார பிரிவின் அவசியம் கருதி 2019-2020 ம் ஆண்டிற்கான கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி மற்றும் இதரபடிகள் அடிப்படையில் நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.771/- வீதம் 6 மாதங்களுக்கான உத்தேச செலவினம் ரூ.5.60/- இலட்சத்திற்கு பொது நிதியிலிருந்து வழங்கிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:-</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்- 567/2017/எச்2** |
| **2236)** | பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மத்திய மாநில அரசு உத்தரவின்படி போர்க்கால அடிப்படையில் கொரோனா வைரஸ் தடுப்பு பணிகள் மேற்கொள்ள உரிய கிருமிநாசினிகள்(கெமிக்கல்ஸ்), மருந்துகள், மற்றும் பாதுகாப்பு சாதனங்கள் கொள்முதல் செய்யும் பணிகளுக்கு ரூ.3,60,000/- மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு-15-ன் கீழ் மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டுள்ளது. பணியின் அவசர அவசியம் கருதி 21.04.2020 ஆம் தேதி விலைப்புள்ளி கோரி விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.<br><br>**<u>விலைப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு:-</u>**<br><br>(see table below) |

| வ.எண் | பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1 | சைன் டிரேடர்ஸ், கோயம்புத்தூர் | ரூ. 3,38,465/- |
| 2 | ரிலையண்ட் குளோபல், கீரின் எனர்ஜி &கோ, கோயம்புத்தூர் | ரூ. 3,33,233/- |
| 3 | ரேடியன்ட் டெக்ஸ்டைல்ஸ் ப்ராஸஸ்,ஈரோடு | ரூ. 3,47,800/- |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள ரிலையண்ட் குளோபல், கீரின் எனர்ஜி & கோ, கோயம்புத்தூர் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கப்பட்டு, பணிகள் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் தனி அலுவலரின் அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**ந.க.எண்- 1186/2019/எச்2**

2237) பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மத்திய மாநில அரசு உத்தரவின்படி போர்க்கால அடிப்படையில் கொரோனா வைரஸ் தடுப்பு பணிகள் மேற்கொள்ள உரிய கிருமிநாசினிகள்(கெமிக்கல்ஸ்), மருந்துகள், மற்றும் பாதுகாப்பு சாதனங்கள் கொள்முதல் செய்யும் பணிகளுக்கு ரூ.25,00,000/- மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டுள்ளது. பணியின் அவசர அவசியம் கருதி 17.04.2020 - ஆம் தேதி உள்ளூர் விலைப்புள்ளி கோரி விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

**<u>விலைப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு:-</u>**

| வ.எண் | பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|
| 1 | சதர்ன் சாலிட் வேஸ்ட் மேனேஜ்மென்ட் சர்வீஸ், கன்னியாகுமரி | ரூ.24,31,500/- |
| 2 | ஸ்ரீ மாசானியம்மன் இண்டஸ்ட்ரீஸ், பொள்ளாச்சி | ரூ.26,95,250/- |
| 3 | ஸ்ரீ முருகா எண்டர்பிரைசஸ், திருப்பத்தூர் | ரூ.28,97,500/- |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள திருவாளர்கள் : சதர்ன் சாலிட் வேஸ்ட் மேனேஜ்மென்ட் சர்வீஸ், பொள்ளாச்சி அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கப்பட்டு, பணிகள் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் தனி அலுவலரின் அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**ந.க.எண்-1186/2020/எச்2**

2238) பொள்ளாச்சி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளில் பயன்படுத்தப்பட்டு வரும் பல்வரைசர் இயந்திரம் மூலம் கடினமான வாழைத்தார் மட்டைகள், தோட்ட கழிவுகள், தென்னை மட்டைகள் மற்றும் இதர கழிவுகள் பல்வரைசர் (PULVERIZER) இயந்திரம் மூலம் அரைத்து உரமாக்கப்படுகிறது. ஆனால் தற்போது இவ்வியந்திரத்தின் பிளேடுகள் அனைத்தும் பழுதாகி பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால் கடினமான மக்கும் பொருட்களை அரைத்து உரமாக்க இயலவில்லை. எனவே பல்வரைசர் இயந்திரத்தில் உள்ள பிளேடுகள் அனைத்தையும் புதிதாக மாற்றி அமைக்க உத்தேச செலவினம் ரூ.35,000/-க்கும் விலைப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொது சுகாதாரப்பிரிவின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.3793/2019/எ 2**

2239) பொள்ளாச்சி நகராட்சி அலுவலகத்திற்கு தினசரி தமிழ் நாளிதழ்கள் நகராட்சிக்கு சொந்தமான

நகரமன்ற வடுகபாளையம் இலவச வாசகசாலைக்கு **01.04.2020** முதல் **31.03.2021** வரை தினசரி நாளிதழ்கள் (ஆங்கிலம் மற்றும் தமிழ்) மற்றும் வார, மாத இதழ்கள் மற்றும் பத்திரிக்கைகள் விநியோகம் பெற ஆகும் உத்தேச செலவினம் ரூ.**60,000/–**க்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.1757 / 2019 /சி4**

**2240)** நகராட்சி எல்லைக்குட்பட்ட வடுகபாளையத்தில் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது. ஆரம்ப சுகாதார நிலைய சாலை பாதாள சாக்கடைப்பணிக்குண்டான ஆள் இறங்கு குழிகள் மற்றும் கழிவு நீர் குழாய்கள் பதிக்க சாலை வெட்டப்பட்டதால் சாலை முழுவதும் பழுந்தடைந்துள்ளது. பொதுமக்கள் நலன் கருதி பழுதான சாலையில் தார்தளம் அமைக்க, மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணி நடைபெற்றுவருகிறது.

தார்சாலை அமைக்கப்படும் சாலையின் இரண்டு இடங்களில் மழைக்காலங்களில் பெய்யும் மழைநீர் சாலை தாழ்வாக உள்ளதால் தேங்க வாய்ப்புள்ளது. மழைநீர் தேங்குவதால் அமைக்கப்படும் தார்சாலை பழுதாக வாய்ப்புள்ளது.

சாலையை பாதுகாக்கும் பொருட்டு, தேங்கும் மழைநீரை அப்புறப்படுத்தும் பொருட்டு, இரண்டு இடங்களில் குழாய் பாலம் அமைக்கலாம்.

குழாய் பாலம் அமைக்க ரூ. 0.70 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**2241)** பொள்ளாச்சி நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் பொள்ளாச்சி நகராட்சிக்கு உட்பட்ட வெங்கடேசா காலனி G.L.S.R I &II நீர்தேக்க தொட்டியிலிருந்து வெளியேறும் பிரதான பகிர்மான குழாய் உள்ள வால்வுகளை மாற்றுதல் பணிக்கு ரூ.**1.00 இலட்சம்** மதிப்பீட்டிற்கு **06.05.2020** ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்க்கண்டவாறு.

| | | |
|---|---|---|
| **1.** | திருவாளர்கள்:எஸ்.கே.கன்ஸ்ட்ரக்ஸன், மதுரை. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **0.23%** குறைவு. |
| **2.** | திரு: ஆர்.சுப்ரமணியம், பொள்ளாச்சி. | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **2.69%** அதிகம். |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **0.23%** குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்கள்:எஸ்.கே.கன்ஸ்ட்ரக்ஸன், மதுரை. அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் **0.23%** குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்கள்:எஸ்.கே.கன்ஸ்ட்ரக்ஸன், மதுரை.அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்
3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி

| | |
|---|---|
| | பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மற்றும் பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்**. 1542/2020/இ1 |
| **2242)** | பொள்ளாச்சி நகராட்சி பொது நிதியின் கீழ் பொள்ளாச்சி நகராட்சிக்கு உட்பட்ட அம்மா உணவகத்தில் சுற்றுச்சுவர் பெயர் பலகை, வர்ணம் பூசுதல் மற்றும் இரண்டு சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் மற்றும் மராமத்து பணி செய்தல் பணிக்கு **ரூ.4.00 இலட்சம்** மதிப்பீட்டிற்கு **06.05.2020** ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்க்கண்டவாறு.<br><br>**1.** திருவாளர்கள்: தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி. — மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **0.25%** குறைவு.<br>**2.** திரு: ஆர்.சுப்ரமணியம், பொள்ளாச்சி — மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **2.61%** அதிகம்.<br><br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **0.25%** குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்கள்: தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி. அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br>1. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.<br>2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் **0.25%** குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்கள்: தண்டபாணி அன் கோ, பொள்ளாச்சி. அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மற்றும் பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 01586/2020/இ1** |
| **2243)** | பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான ஆணையாளர் குடியிருப்பு வளாகம் கட்டிடம் சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டது ஆகும். கட்டப்பட்டு பல ஆண்டுகள் ஆன காரணத்தினால் கதவு ஜன்னல்கள் பழுதடைந்தும் தரைத்தளங்கள் உடைந்தும், கழிப்பிடங்கள் மராமத்துப்பணி மேற்கொள்ளப்படாமலும் உள்ளது. மேலும் பிளம்பிங் பணிகள், பாத்ரூம் மற்றும் கழிப்பிடத்தில் புதிதாக டைல்ஸ் அமைத்தல், பழைய , இரும்பு கதவினை அகற்றி புதிதாக PVC கதவுகள் அமைக்க வேண்டியுள்ளது. கட்டிடத்தில் மின் சம்பந்தம்பட்ட மராமத்துப் பணிகள் மற்றும் மேற்கூரையில் False Ceiling, மரத்தடுப்புகள் அமைக்க வேண்டியுள்ளது. மேலும் குடிநீர் சுத்திகரிப்பு அமைக்க புதிதாக அமைக்க வேண்டியுள்ளது. இப்பணியினை மேற்கொள்ள ரூ.9.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்காண் செலவினத்தை நகராட்சியின் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். |

| | |
|---|---|
| 2244) | பொள்ளாச்சி நகராட்சியின் குடிநீர் விநியோகத்திற்கு பயன்படும் TN 41 3444-ன் வாகனத்தின் தகுதி சான்றிதழ் முடிவுறவுள்ளதால், தமிழ்நாடு போக்குவரத்து துறையிடம் புதுப்பிக்க வேண்டியுள்ளது. இதற்கான பழுது மற்றும் புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளவும், இதற்கான உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கி மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண்.1708/2020/இ2** |
| 2245) | நகராட்சிக்கு சொந்தமான சுந்தரம் லே அவுட்டில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக பூங்கா அமைக்கப்பட்டது. இப்பூங்கா அமைக்கப்பட்டு பலவருடங்கள் ஆனதால் சுற்றுச் சுவர் கம்பிவேலிகள், நடைபாதை, பேவர் பிளாக்குகள் போர்வெல் மோட்டார்கள், மின்சார விளக்குகள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் பழுதடைந்தும் மற்றும் பொலிவு இழந்த நிலையில் உள்ளது.<br>இதனால் பொதுமக்கள் மற்றும் குழந்தைகள் பூங்காவை பயன்படுத்த இயலாத நிலை ஏற்படுகிறது.<br>பூங்காவை பொலிவு படுத்தும் வகையில் மேற்காணும் பணிகளில் மராமத்துப்பணி மேற்கொண்டு புதுப்பிக்க வேண்டியுள்ளது.<br>எனவே பொதுமக்கள் மற்றும் குழந்தைகள் நலன்கருதி மேற்காணும் பணிகளை மேற்கொண்டு பூங்காவினை புதுப்பிக்க ரூ.2.10 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.<br>தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலககுறிப்பு.**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். |
| 2246) | நகராட்சிக்கு சொந்தமான அன்பு நகரில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக பூங்கா அமைக்கப்பட்டது. இப்பூங்கா அமைக்கப்பட்டு பலவருடங்கள் ஆனதால் சுற்றுச் சுவர் கம்பிவேலிகள், நடைபாதை, பேவர் பிளாக்குகள் போர்வெல் மோட்டார்கள், மின்சார விளக்குகள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் பழுதடைந்தும் மற்றும் பொலிவு இழந்த நிலையில் உள்ளது.<br>இதனால் பொதுமக்கள் மற்றும் குழந்தைகள் பூங்காவை பயன்படுத்த இயலாத நிலை ஏற்படுகிறது.<br>பூங்காவை பொலிவு படுத்தும் வகையில் மேற்காணும் பூங்காவில் மராமத்துப்பணி மேற்கொண்டு புதுப்பிக்க வேண்டியுள்ளது.<br>எனவே பொதுமக்கள் மற்றும் குழந்தைகள் நலன்கருதி மேற்காணும் பணிகளை மேற்கொண்டு பூங்காவினை புதுப்பிக்க ரூ.2.20 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.<br>தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு.**<br>மன்றம் அனுமதி வழங்கலாம். |
| 2247) | நகராட்சி எல்லைக்குட்பட்ட வடுகபாளையம் மெயின் ரோட்டில் மயானம் உள்ளது. இம்மயானத்திற்கு செல்வதற்கு ஏற்கனவே மூடுகல் இல்லாத வடிகாலினை கடந்து செல்ல வேண்டியுள்ளது. இதனால் மயானத்திற்கு செல்வோர்கள் மிகவும் அவதிக்குள்ளாகிறார்கள். மேலும் மயானத்தின் உள்பகுதிக்கு செல்வதற்கு போதுமான சாலை வசதியும் இல்லாமல் உள்ளது. |

| | |
|---|---|
| | பொதுமக்கள் நலன்கருதி, ஏற்கனவே உள்ள வடிகாலின் மீது R.C.C. சிலாப், பாதுகாப்பு கருதி இரும்பு கேட் மற்றும் மயானத்தின் உட்பகுதியில் சாலை வசதிக்காக கான்கிரிட் தளம் அமைக்க வேண்டியிருந்தது.<br>மேற்காணும் பணிகளை மேற்கொள்ள ரூ.6.30 இலட்சத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்டது.<br>தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு நகர்மன்ற தீர்மான எண். 1864, 30.09.2019 ஆம் நாளில் ஒப்புதல் வழங்கியுள்ளது.<br>நகர்மன்ற தீர்மான எண் அடிப்படையில் உரிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை நகர்மன்ற தீர்மான எண். 1913 , 04.11.2019-ம் தேதியில் ஒப்புதல் வழங்கியுள்ளது.<br>நகர்மன்ற தீர்மான அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 18.12.2019-ம் தேதி பணி உத்திரவு வழங்கப்பட்டது.<br>பணி உத்திரவிற்கேற்ப, மேற்காணும் இடத்தில் பணி தொடங்கி நடைபெற்று வந்தது. இறந்தவர்களின் உடலை மயானத்திற்குள் எளிதாக எடுத்துச் செல்லும் வகையில் முகப்பு பகுதியில் சாலையின் அகலம் அதிகமாக அமைக்க மூலமதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டிருந்தது. அதற்கு தகுந்தாற்போல் சாலை அமைக்க மண் அகற்றும் பணி தொடங்கப்பட்டது.<br>இந்நிலையில் பாதாள சாக்கடைப்பணிக்காக வடுகபாளையம் பகுதியில் ஒதுக்கப்பட்ட இடம் பணி செய்ய இடையூறு ஏற்பட்டதில் மாற்று ஏற்பாடாக மயானத்திற்குள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக மயான முன்புறம் Lift Station அமைக்க அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி அகலமான சாலையில் வலது பக்கத்தில் நீர் உந்து நிலையம் அமைக்க மண் அகழ்வு பணி தோண்டப்பட்டது. மேலும் அமைக்கப்பட வேண்டிய சாலையின் இடதுபக்கத்தில் நுண்ணுயிரி உரமாக்கல் மையக்கட்டிடம் (MCC) நகராட்சி மூலமாக கட்டப்பட்டுள்ளது.<br>இதனால் அமைக்கப்பட வேண்டிய சாலையின் அகலம் குறைவாக அமைக்கப்பட வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.<br><br>சாலை அமைக்க தயார் செய்யப்பட்ட மூலமதிப்பீட்டில் உள்ள இனங்களின் அளவுகள் குறைவாக செய்யவேண்டியுள்ளதால் மீதம் ஏற்படும் சூழ்நிலை உள்ளது.<br><br>இவ்வாறு மீதம் ஏற்படும் தொகையில் அவசியத்தேவை தேதி கருதி மயானம் அமைந்துள்ள பகுதிக்கு மிக அருகாமையில் 200 மீட்டர் நீளத்திற்குள் உள்ள N.V.M வீதி குறுக்கு வீதியில் பாதாளசாக்ககடைப் பணிக்காக தோண்டப்பட்ட சிறிய சந்துகளில் கான்கிரிட் தளம் அமைத்து பராமரிக்கலாம்.<br>எனவே மூலமதிப்பீட்டில் உள்ள அளவுகளுக்கும் மற்றும் மதிப்பீட்டுத் தொகைக்கு மிகாமலும், அருகிலுள்ள குறுகிய சந்துகளில் கான்கிரிட் தளம் அமைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மூலமதிப்பீட்டில் உள்ள அளவுகளுக்கும் மற்றும் மதிப்பீட்டுத் தொகைக்கு மிகாமலும், அருகிலுள்ள குறுகிய சந்துகளில் கான்கிரிட் தளம் அமைக்க மன்றத்தின் அனுமதி வழங்கலாம். |

| | |
|---|---|
| **2248)** | பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட 26வது வார்டு பகுதியின் நடராஜ் மணியகாரர் காலனி மற்றும் கண்ணப்பன் நகர் பகுதியில் குடிநீர் விநியோகத்தில் குறைவான அழுத்தம் உள்ளதால், இப்பகுதி பொதுமக்களுக்கு போதுமான குடிநீர் கிடைக்க பெறுவதில்லை. எனவே இப்பகுதிக்கு தனியான பகிர்மான குடிநீர் குழாய் அமைக்கலாம். இப்பணியினை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி முன்அனுமதி பெற்று மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம். |
| **2249)** | பொள்ளாச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட 26வது வார்டு பகுதியின் வாசவி நகர் மற்றும் கண்ணப்பன் நகர் பகுதியில் குடிநீர் பயன்பாடு அல்லாத பிறபயன்பாட்டிற்கு கிணற்று நீர் வசதியின்றி உள்ளது. எனவே இப்பகுதி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு இங்குள்ள ஆழ்துளை கிணற்றில் மின்மோட்டார் பம்பு மற்றும் பகிர்மான குழாய்கள் அமைத்து கிணற்று நீர் விநியோகம் செய்யலாம். இப்பணியினை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.5.80 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி முன்அனுமதி பெற்று மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம். |

**2250)** பொள்ளாச்சி நகராட்சி பொது நிதியின் கீழ் பல்வேறு திட்டங்களின் கீழ் நடைபெறும் பணிகளை பார்வையிட தொழில்நுட்ப உதவியாளர்கள் Gr.III ல் ஒப்பந்த அடிப்படையில் அவுட்சோர்சிங் (Out Sourcing) முறையில் நியமனம் செய்தல் பணிக்கு ரூ.4.45 **இலட்சம்** மதிப்பீட்டிற்கு 15.05.2020 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்க்கண்டவாறு

.

| | | |
|---|---|---|
| 1. | M/S. Green Dream, Pollachi | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.47% குறைவு. |
| 2. | M/S. Gideon International forces, Pollachi | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.75% அதிகம். |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.47% குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/S. Green Dream, Pollachi. அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.47% குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/S. Green Dream Pollachi. அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்
3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மற்றும் பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.** 2316/2018/இ1

**2251)** அம்பராம்பாளையம் ஊராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள பொள்ளாச்சி நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலைய கட்டிடங்களுக்கு 2018–19 ஆண்டிற்கான சொத்து வரி ரூ.35878/– மற்றும் 2019–20 ஆண்டிற்கான சொத்து வரி ரூ.35978/– ஆக மொத்தம் ரூ.71756/– யை அம்பராம்பாளையம் ஊராட்சிக்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**2252)** பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 14ல் அமைந்துள்ள தந்தை பெரியார் வீதியில் (கிழமேல் வீதி) மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டு சுமார் 20 ஆண்டுகளுக்கு மேல் ஆகியுள்ளது. அதனால் மழைநீர் வடிகால் முழுதும் சேதமடைந்தும் அடைப்புகள் ஏற்பட்டும் மழைநீர் செல்ல இயலாது உள்ளது. இதனால் கழிவுநீர் முறையாக வடியாமல் தேங்கியுள்ளது. எனவே இதன்மூலம் நோய் தொற்று ஏற்படும் அபாயம் உள்ளதால் பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். எனவே புதிய மழைநீர் வடிகால் அமைப்பதற்கு ரூ.3.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காண் செலவினத்தை நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

| | |
|---|---|
| 2253) | பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 35–ல் உள்ள ஜோதி நகர் 'ஏ' காலனியில் நகராட்சி சிறுவர் பூங்கா உருவாக்கப்பட்டு பத்து ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. இதுவரை எந்தவித மராமத்துப் பணியும் மேற்கொள்ளப்படாது இருந்த நிலையில், செடி புதர்கள் முளைத்து பொதுமக்கள் மற்றும் சிறுவர்கள் பயன்படுத்த இயலாத நிலையிலுள்ளது. மேலும் விளையாட்டு உபகரணங்கள் உடைந்தும், வர்ணமின்றியும் பயன்படுத்த இயலாது உள்ளது. எனவே பூங்காவில் உள்ள நடைபாதை தளம், விளையாட்டு உபகரணங்கள் சரி செய்தல், வர்ணம் பூசுதல் ஆகிய பணிகள் மேற்கொள்வதற்கு ரூ.2.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்காண் செலவினத்தை நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். |
| 2254) | பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட வார்டு 10 ல் உள்ள நந்தனார் காலனி முக்கிய சாலை வழியாக சி.பி.இராமகிருஷ்ணா லே அவுட் செல்லும் வழியின் குறுக்கே மழைநீர் வடிகால் செல்கிறது. மழைநீர் வடிகாலின் மேலே பொதுமக்கள் கடந்து செல்ல கருங்கற்கள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் மழைநீர் வடிகாலின் மீதமுள்ள பகுதி மூடப்படாமல் உள்ளதால் எந்நேரமும் பொதுமக்கள் மற்றும் குழந்தைகளுக்கு ஆபத்து விளைவிக்கும் நிலையிலுள்ளது. எனவே பழைய கருங்கல் மூடிகளை அகற்றிவிட்டு புதியதாக Rcc Cover Slab அமைப்பதற்கு ரூ. 1.60 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்காண் செலவினத்தை நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். |
| 2255) | பொள்ளாச்சி நகராட்சியில் குடிநீர் விநியோகத்தில் தலைமை நீரேற்று நிலையம், நீர் உந்து நிலையம், 9 எண்ணம் நீர் தேக்க வளாகங்கள் மற்றும் இயற்கை உயிரி எரிவாயு கலன் வளாகத்தில் காவல் பணிபுரிய தேவையான பணியாளர்கள் தற்சமயம் போதிய அளவில் இல்லாத காரணத்தால், மேற்காண் இடங்களில் காவல் பணிகள் புரிய தேவையான காவலர் பணியாளர்களை அவுட் சோர்சிங் முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணி அமர்த்த வேண்டியுள்ளது. மேற்காண் இடங்களில் 12 மணி நேர பணிக்கு ஒருவர் வீதம் 12 இடங்களில் காவல் பணிபுரிய 24 நபர்கள் (காவலாளிகள்) தேவைப்படுகிறார்கள். இவர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர், கோவை அவர்களின் செயல்முறை ஆணைப்படி ந.க.எண்.6908/2019/இ3 நாள்.31.07.2019–ல் நிர்ணயம் செய்யப்பட்ட கூலியுடன் ESI, EPF மற்றும் Insurance உடன் 17.06.2020 முதல் 13.12.2020 வரையிலான 180 நாட்களுக்கு வழங்க உத்தேசமாக ரூ.21,00,000/– செலவு ஆகும். மேற்காண் இடங்களில் அவுட்சோர்சிங் முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரி காவலர் பணியாளர்களை அமர்த்தவும், இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.21,00,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கு செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.<br>**ந.க.எண்.2316/2018/இ1** |
| 2256) | பொள்ளாச்சி நகராட்சியின் குடிநீர் விநியோகத்தில் மார்கட் ரோடு நீர் உந்து நிலையத்தில் நீரேற்றம் செய்யும் 100HP மின் மோட்டார் யுனிட் 1–ன் காயில் பழுதடைந்து இயக்க இயலாத நிலையில் உள்ளது. இதனால் குடிநீர் விநியோக பணிகள் பாதிப்படைகிறது. பழுதடைந்த காயில் மற்றும் பேரிங்குகளை புதுப்பித்து இயக்க வேண்யுள்ளது. இப்பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேசமாக ரூ.90,000/– செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம். |

2. பணியின் அவசர அவசியம் கருதி முன்அனுமதி பெற்று மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**2257)** பொள்ளாச்சி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் துப்புரவு பணியயளராக பணிபுரிந்து 11.07.2011ல் காலமான திரு.(லேட்)கர்ணன்/திருமூர்த்தி என்பவரின் இரண்டாவது மனைவியும் வாரிசுமான திருமதி.கே.சித்ரா என்பவர் கருணை அடிப்படையில் பணியிடம் வழங்கக் கோரி பணியாளர் இறந்து 5 வருடத்திற்கு பிறகு சென்னை உயர்நீதிமன்றத்தில் (வழக்கு எண்.21878/2019ல்) வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்கண்ட வழக்கிற்கு இந்நகராட்சி சார்பில் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.ஆனந் என்பவர் மூலமாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நடைபெற்று வருகிறது.

மேற்கண்ட வழக்கிற்கு ஆகும் அனைத்து செலவினங்களுக்கும் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:-**

1. சென்னை உயர்நீதிமன்ற வழக்கிற்கு அவசர அவசியம் கருதி வழக்கிற்கான அனைத்து செலவினமும் நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.4132/2019/எச்1**

**2258)** பொள்ளாச்சி நகராட்சி எல்லைப்பகுதி முழுவதும் மொத்தம் உள்ள **162.64** கி.மீட்டர் நீளமுள்ள சாலைக்கு பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் **7308** ஆள் இறங்கு குழிகளும், **162.64** கி.மீட்டர் நீளத்திற்கு கழிவு நீர் சேகரிப்பு குழிகளும் பதிக்கப்பட்டுள்ளன. இதனால் சாலைகள் பழுதடைந்து மோசமான நிலையிலுள்ளது. மேலும் போக்குவரத்திற்கு பெரிதும் இடையூராக உள்ளது.

பொதுமக்கள் நலன் கருதியும், போக்குவரத்தை கருத்தில் கொண்டு கீழ்கண்ட சாலைகளில் தார்தளம் அமைக்க, **TNSUDP** நிதியில் 2020–21ம் நிதியாண்டில் பணி மேற்கொள்ள ரூ.1000.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | வார்டு எண். | சாலை யின் நீளம் கி.மீ | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்ச த்தில்) |
|---|---|---|---|---|
| 1. | ஆர்.பி. நகர், கொங்கு நகர், நேதாஜி ரோடு உயர் கோபுர விளக்கு முதல் பாலக்காடு சாலை வரை, முத்துக்குமாரசாமி லே அவுட், ராமாத்தாள் லே அவுட் வடுகபாளையம் இட்டேரி ரோடு, வடுகபாளையம் இட்டேரி ரோடு குறுக்கு வீதிகள், ரயில்வே லைன் சந்து, கந்தன் வீதி செல்லக்குமாரர் வீதி தொடர்ச்சி, பி.கே.டி. பள்ளிச்கூட சாலை, அபிராமி ஆண்டாள் நகர் குறுக்கு வீதிகள், குமரன் லே அவுட், குமரன் நகர் பள்ளிக்கூட சாலை, ரயில்வே ஸ்டேசன் ரோடு வள்ளியம்மாள் ரோடு, கண்ணப்பன் நகர், நியூ அழகப்பா லே அவுட், கிருஷ்ணசாமி பள்ளிகூட சாலை, பழனியப்பன் வீதி குறுக்கு வீதிகள், ராம் நகர் மெயின் மற்றும் குறுக்கு வீதிகள், வி.கே.வி லே அவுட் குறுக்கு வீதிகள் மற்றும் அன்பு நகர் ஆகிய வீதிகளில் தார் தளம் அமைத்தல். | 01,02,03, 04,22,23, 24,25,27 | 6.83 | 400.00 |
| 2. | வெங்கிடாசலபுரம் மெயின் மற்றும் குறுக்கு வீதிகள், | 11,31,32, | 4.00 | 200.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| | LIG காலனி, டீச்சர்ஸ் காலனி, சோமசுந்தராபுரம் முதல், இரண்டு, மூன்று கிழமேல் சாலைகள், லட்சுமி புரம் டேங்க் கிழக்குப்புற சாலை, பவானி சங்கர் வீதி, மரப்பேட்டை பள்ளம் இஸ்லாமியர்கள் மயான பின்புற சாலை, P.S. ஆறுமுகம் நகர் கிழற்கு மேற்கு சாலை இலட்சுமி நகர் மலைசாமி வீதி, முகமது நகர் மற்றும் சுண்ணாம்பு கால்வாய் இட்டேரி ரோடு ஆகிய வீதிகளில் தார் தளம் அமைத்தல். | 34,36 | | |
| 3. | வெங்கட்டராமபுரம் வீதி, சுப்புமாட வீதி, டாக்டர் முனுசாமி வீதி, விநாயகர் கோவில் வீதி, வாணி மாட வீதி, நந்தனார் காலனி, ராஜேஸ்வரி நகர், முல்லை நகர், ஸ்டேட் பேங்க் காலனி, LIG காலனி மெயின் ரோடு, அண்ணா நகர் மற்றும் ஆறுமுகம் நகர் மேற்கு சாலை ஆகிய வீதிகளில் தார் தளம் அமைத்தல். | 06,08,10, 14 | 3.72 | 200.00 |
| 4. | விஜய ராகவன் வீதி, V.O.C வீதி, அதியமான் வீதி அம்மணீஸ்வரன் கோவில் வீதி, பாரிவள்ளல் வீதி, திருவள்ளுவர் வீதி, கம்பர் வீதி, ஆறுமுகம் நகர் கிழக்கு, நாச்சிமுத்து வீதி, கரியகாளிஅம்மன் கோவில் வீதி மற்றும் கணபதி நகர் ரோடுகள் ஆகிய வீதிகளில் தார் தளம் அமைத்தல். | 05,06,07, 08,35 | 3.54 | 200.00 |

மேற்காணும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. மன்றம் அனுமதி வழங்கலாம் .
2. மேற்காணும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடுகளுக்குண்டான தொகையை **TNSUDP** நிதியில் முழு மான்யமாக பெற அரசிற்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதி வழங்கலாம்.